


# லயோலா கல்லூரி பட்டமளிப்பு விழா: 62 பேருக்கு தங்கப் பதக்கம்

சென்னை, டிச.12–

சென்னை லயோலா கல்லூரியில் 94 பட்டமளிப்பு விழா நடந்தது. இவ்விழாவில் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் டாக்டர் எம்.கிருஷ்ணன் தலைமை விருந்தினராகப் பங்கேற்றுப் பேசினார்.

இந்தியாவில் கணிசமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும்... அதனுடைய பலாபலன்களை நாம் அடைந்திருந்தாலும்... உயர்கல்வியில் உலகத் தரப் பட்டியலில் நாம் அங்கீகரிக்கப்படவில்லை என்றார். ஆகவே புதிய ஆய்வுகளின் பலன்களை சமூகத்துக்கு பயனுள்ளதாக மாற்ற வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

வகுப்பறையில் பெறும் அறிவை மாணவர்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்திட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

4,389 மாணவர்களில் தேர்ச்சி பெற்றவர்கள் – 2579 மாணவர்கள், பட்டம் பெறத் தகுதி பெற்றவர்கள். 62 பேர் தங்கப் பதக்கம் வென்றவர்கள். 1933 பேர் பட்டதாரிகள், 539 பேர் பட்டமேற்படிப்பு பட்டதாரிகள், 47 பேர் எம்ஃபில் பட்டதாரிகள். இவர்கள் 2020–2021ல் படிப்பை முடித்து வெளியேறியவர்கள். இவர்களில் 76 பேர் சுயதொழில் செய்பவர்கள், 926 பேர் மேற்படிப்பைத் தொடர்பவர்கள்.

மறைதிரு டாக்டர் பிரான்சிஸ் பி.சேவியர், டாக்டர் பி. ஜெயராஜ், எஸ்.ஜே., செயலாளர் மறைதிரு. டாக்டர். ஏ. தாமஸ் எஸ்ஜே முதல்வர், ஜே.ஏ. சார்லஸ், துணை முதல்வர் மற்றும் பல்வேறு துறைகளின் தலைவர்கள் விழாவில் பங்கேற்றார்கள்.